[1994 மார்ச் 19

50—

தமிழகத்தின் புதிய நிலக்கரிச் சுரங்கம்.

*15866 திரு. கே. செல்வராஜ்:
மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் புதிய நிலக்கரிச் சுரங்கம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம், எனில் எங்கு எப்போது கண்டு பிடிக்கப் பட்டது.?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் நிலக்கரிப் படிவங்கள் இல்லை. ஆனால் பழுப்பு நிலக்கரிப் படிவ இருப்புக்கள் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) திருச்சி மாவட்டம், ஜெயங்கொண்ட சோழ புரப் பகுதியில் லிக்னைட் படிவ இருப்புகள் உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தென்னாற்காடு - வள்ளலார் மாவட்டத்தில் விருத்தாசலம் மற்றும் காட்டுமன்னார்கோவில் வட்டங்களிலும் லிக்னைட் இருப்பதாக 1989-90 ஆம் ஆண்டில் நடத்திய துறப்பணப் பணிகளினால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஜெயங் கொண்ட சோழபுரத்தில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியின் அளவு என்ன? அதைப் பயன்படுத்தி நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு தொழில் திட்டம் ஏதாவது வைத்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஜெயங்கொண்ட சோழபுரம் பகுதியில் சுமார் 120 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் பழுப்பு நிலக்கரிப் படிவங்கள் இருப்பதாகப் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஜெயங்கொண்ட சோழபுரம் பகுதியில் சுமார் 1150 மில்லியன் டன் லிக்னைட் இருப்பதாக மத்திய அரசின் புவியியல் ஆய்வு நிறுவனத்தால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் கிடைக்கும் லிக் னைட்டைப் பயன்படுத்தி, 1500 மெகாவாட் மின் உற்பத்தி

1994 மார்ச் 19]

செய்யும் திட்டத்தைத் தமிழ்நாடு அரசினுடைய தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் ஆரம்பிக்க இருக்கிறோம்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பி. வி. இராஜேந்திரன்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கடந்த ஆண்டு அல்லது அதற்கு முந்தைய ஆண்டு லிக்னைட் மூலமாக சராசரியாகத் தமிழக அரசுக்கு வருகின்ற ராயல்டி வருமானம் எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கனிவுடன் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது இதிலே வராது.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் முற்றிலும் தொடர்பில்லை. தனியாகக் கேள்வி கேட்கவும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் மத்திய அரசு மூலமாக ஆய்வு செய்து நிலக்கரி இருக்கிறதா என்று சோதனை செய்து கொண்டு இருக்கிறார்கள். அதே போல, கோவை மாவட்டம் இன்டஸ்ட்ரியல் மாவட்டம், அங்கே தொழில் வளர்ச்சி அதிகமாக இருக்கிறது. தென்னிந்தியாவினுடைய தொழில் மான்செஸ்டர் என்று கூட கோவை மாவட்டத்தைச் சொல்லுவார்கள். அப்படிப்பட்ட தொழில் வளம் பொருந்திய கோவை மாவட்டத்தில் நிலக்கரி கிடைக்குமா என்று ஆய்வு செய்ய மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய யோசனையைப் பரிசீலித்து இந்த அரசு மத்திய அரசுக்கு எழுதும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நிலக்கரியை வெட்டி எடுக்கின்ற உரிமம் மத்திய அரசுக்கு மட்டும்தான் உண்டு என்று இது வரையிலே நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். அந்த உரிமம் நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய தமிழக அரசுக்கும் உண்டா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உறுப்பினர் சொன்னதைப் போல சுரங்கத் துறை மூலம் எடுக்கிற கனிம வளத்திற்கு அனுமதி கொடுக்கின்ற உரிமை மத்திய அரசில் தான் இது வரைக்கும் இருந்து வந்தது. அந்த உரிமை மாநில அரசுக்கும் வேண்டுமென்று போராடிப் பெற்ற முதல் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் மத்திய அரசிடம் போராடிய காரணத்தால்தான், திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் இருக்கிற பழுப்பு நிலக்கரியை மாநில அரசு எடுப்பதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 51, திரு. வி. ரவிச்சந்திரன், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

51—

பச்சமலை, வண்ணாடு, தண்ணீர் பள்ளம் கிராமத்தில் சத்துணவு மையம் அமைத்தல்.

*22059—திரு. வி. ரவிச்சந்திரன் :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பச்சமலை, வண்ணாடு, தண்ணீர் பள்ளம் கிராமத்தில் சத்துணவு மையம் அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர்: